12.02.2026
STC.62/2021
DW–1. கண்ணன் த/பெ.பொன்னையா
(மனுதாரர்  மற்றும் எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போதும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் வேலை பார்க்கிறேன் என்று சொன்னால் சரிதான். புகார்தாரரை எனக்கு நன்கு தெரியும். காசோலை பற்றி எந்த புகாரும் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்புக்கு நான் எந்த பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியும். இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு எனது தரப்பில் ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் வாய்மொழியாக சொல்லியுள்ளேன். அந்த வாய்மொழியான ஆட்சேபனை என்பது தற்போது தான் சொல்லியுள்ளேனா என்றால் ஆரம்பம் முதலே சொல்லியிருக்கிறேன். எழுத்து பூர்வமாக எழுதி கொடுக்கலாம் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.3 காசோலை என்னுடையது தான் என்றால் சரிதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். பின்னிட்டு பின்யோசனை செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3 காசோலைப்படியும், சட்டப்படியும் நான் புகார்தாரருக்கு பணம் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.